සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2024 (2025)
இறுதி தவணைப் பரீட்சை - 2024 (2025) / **Year End Term Test - 2024 (2025)**

ශ්‍රේණිය / தரம் / Grade } **07**

# வரலாறு

කාලය / நேரம் / Time } 02 மணி

නම / பெயர் / Name } ................................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. } ..........................................

பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
❖ 1 – 5 வரையான வினாக்களில் வழங்கப்பட்டுள்ள சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) புராதன கல்வெட்டுக்களில் “சேனைகளை” குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ள சொல்,
 1. சேன் 2. பிட்டபிம் 3. கனத்த 4. நவதெலி சேனை

2) புராதன வெளிநாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய வடபிரசேத்தில் அமைந்துள்ள துறைமுகம் யாது ?
 1. கொடவாய 2. கோகண்ணதித்த 3. ஜம்புக்கோளப்பட்டனம் 4. தேவ நகரம்

3) இலங்கையை சோழர்களிடமிருந்து மீட்டெடுத்த மன்னன்,
 1. நிஸ்ஸங்கமல்லன் 2. 1ம் விஜயபாகு 3. 1ம் பராக்கிரமபாகு 4. மகாசேனன்

4) இலங்கைக்கு மிகச் சமீபமான தென்னிந்திய இராசதானி யாது ?
 1. பாண்டிய அரசு 2. சோழ அரசு 3. பல்லவ அரசு 4. கலிங்க அரசு

5) பராக்கிரமபாகு இளவரசனுக்கும் இரண்டாம் கஜபாகு மன்னனுக்கு இடையே இருந்த ஒப்பந்தம் பற்றி கூறும் கல்வெட்டு யாது ?
 1. கல்பொத்த கல்வெட்டு 2. அம்பகமுவ கல்வெட்டு
 3. தெவனகல கல்வெட்டு 4. சங்கமுவிஹார கல்வெட்டு

❖ 6 – 10 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியெனில் (✓) அடையாளத்தையும் பிழையெனில் (×) அடையாளத்தையும் அடைப்புக்குறிக்குள் இடுக.

6) அநுராதபுரத்தை ஆட்சி செய்த 8ம் அக்கபோதி மன்னன் தனது தாய்க்கு உதவி ஒத்தாசை செய்ததாக மகாவம்ச நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ( )
7) மானவர்ம இளவரசன் இரண்டாம் தாடோபதிஸ்ஸ அரசனின் மகனாவான். ( )
8) எதாவது ஒரு இனத்துக்கு உரிய மொழிகள், நடனங்கள், நாட்டார் பாடல்கள் என்பன தொட்டுணரக்கூடிய மரபுகள் எனப்படும். ( )
9) தளதா மாளிகை உட்பட கண்டி நகரம் உலக மரபுரிமையாக பெயரிடப்பட்டுள்ளது . ( )
10) லங்காதிலக விஹாரை கம்பளை காலத்துக்குரிய விஹாரையாகும். ( )

❖ 11 – 15 வரையான வினாக்களுக்கு இடைவெளிக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

11) நெற் செய்கையின் போது சூடு மிதிக்கும் இடம் ..................................... என அழைக்கப்படும்.
(கெத/ கமத / பெல)

12) பொலன்னறுவையை ஆட்சி செய்த ............................................................................................ மன்னன் துலாம்பரம் தானம் வழங்கியதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(முதலாம் பராக்கிரமபாகு / முதலாம் விஜயபாகு/நிஸ்ஸங்கமல்லன்)

13) இலாக்ஷா கலையில் பிரசித்தம் பெற்று விளங்கியது ...................................................... பிரதேசமாகும்.
(மலையகம் / ருஹுணை/ இராசரட்டை)

14) ருவன்வெலிசாய தூபியை அலங்கரிப்பதற்காக பவளமணிகளை உரோமபுரியிலிருந்து ........................................................................................ மன்னன் கொண்டு வந்தான்.
(துட்டகைமுனு / வலகம்பாகு / பாதிகாபய)

15) ஒலிம்பிக் விளையாட்டு .............................................................நாட்டில் ஆரம்பமானது.
(இங்கிலாந்து / கிறீஸ் / இத்தாலி)

❖ 16 – 20 வரையான வினாக்களில் சரியான விடையை வைத்து இடைவெளி நிரப்புக.

16) மூன்று நிக்காயாக்களையும் ஒற்றுமைப்படுத்தி பொலன்னறுவை கதிகாவதவை நிறுவ ........................................................................................ மன்னன் முன் நின்று செயல்பட்டான்.

17) சிறந்த கட்டட நிர்மாணக் கலையம்சங்கள், பூங்கா, பொய்கைகள், நீர் அகழிகள் என்பவற்றை அவதானிக்கும் போது ............................................................. கோட்டை அதிசிறந்த கலைக்கூடமாகும்.

18) கலிங்கமாகனை தோல்வியடையச் செய்து இராசரட்டையை மீண்டும் கைப்பற்றிக் கொள்ள பாரிய யுத்தமொன்றை மேற்கொள்ள வேண்டிய நிலை ....................................................................... மன்னனுக்கு ஏற்பட்டது.

19) ......................................................... செப்புச் சாசனத்தில் முதலாம் விஜயபாகு மன்னன் தனது இளமைக் காலத்தில் அவருக்கும் அவரின் பெற்றோருக்கும் பாதுகாப்பை வழங்கியதற்காக புதல்னா சேனாதிபதிக்கு வழங்கிய வரப்பிரசாதங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

20) கொலோசியம் திறந்தவெளி விளையாட்டு மைதானம் ....................................................................... அமைந்துள்ளது.

($2 \times 20 = 40$ புள்ளிகள்)

பகுதி II

- ❖ முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ மேலும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.
- ❖ மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

01) (அ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை தெரிவு செய்து விடைத்தாளில் எழுதுக. (08 புள்ளிகள்)

I. தெவுந்தரை
II. வளவ கங்கை
III. அநுராதபுரம்
IV. மன்னார்
V. பருத்தித்துறை முனை
VI. கண்டி
VII. கல் ஓயா
VIII. ஹுருளு வாவி




(ஆ) I. உரு A யில் காட்டப்படுவது யாது ?
II. இதனை நிர்மாணித்தவர் யார் ?
III. இது எங்கு அமைந்துள்ளது ?
IV. இது எக்காரணத்துக்காக அமைக்கப்பட்டது ?
(04 புள்ளிகள்)



உரு A

(இ) I. உரு B யில் காட்டப்படுவது யாது ?
II. இது யாரால் அமைக்கப்பட்டது ?
III. இதனை எங்கு அவதானிக்கலாம் ?
IV. இது அமைக்கப்பட்ட காலப்பகுதி யாது ?
(04 புள்ளிகள்)



உரு B

02) I. இலங்கையின் வாழ்வாதார முறை அமைந்துள்ள பிரதான துறைகள் மூன்றும் யாவை ? (03 புள்ளிகள்)
II. A. காட்டை தீயிட்டு எரித்து சுத்தப்படுத்தி தயாரிக்கப்பட்ட நிலம் உம்மக்க ஜாதக நூலில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது ?
B. நெல் பயிரிடக்கூடிய பிரதான போகங்கள் இரண்டையும் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

III. A. தாழ்நிலப் பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் பின்வரும் சொற்களின் கருத்தை தெளிவுபடுத்துக.

1. வேளாண்மைக்குதிர் (உட்பட்டிக் குவியல்)
2. களம்

B. சேனைப் பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் பின்வரும் சொற்களின் கருத்தை எழுதுக.

1. கினிளாதிகாவ
2. நவதெனி சேனை
3. ஹெலிகடா (05 புள்ளிகள்)

03) I. பின்வரும் கைத்தொழில்களில் ஈடுபட்டவர்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர் ?

1. இரும்புத் தொழில் செய்தோர்
2. செப்புலோகத் தொழில் செய்தோர்
3. தங்கவேலை செய்வோர் (03 புள்ளிகள்)

II. A. புராதன இலங்கையில் வர்த்தகம் நடைபெற்ற இரண்டு முறைகளையும் கூறுக.

B. வெளிநாட்டு வர்த்தகர்கள் அமைத்த வர்த்தக சங்கங்கள் இரண்டை கூறுக. (03 புள்ளிகள்)

III. A. ஹோபிடிகம சந்தையில் நடைபெறும் முறைகேடுகளை தடுப்பதற்காக நான்காம் உதய மன்னனால் அமைக்கப்பட்ட கல்வெட்டு யாது ?

B. இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட வர்த்தக சட்டதிட்டங்கள் இரண்டை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

04) I. அரச நிர்வாக நடவடிக்கைகளில் உதவிய மூன்று அதிகாரிகளை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. A. அநுராதபுர காலத்தில் அரச உரிமை உரித்தான முறைகள் இரண்டை குறிப்பிடுக.

B. அரசனின் கடமைகள் இரண்டை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

III. A. மகா விஜயபாகு மன்னனின் பௌத்த சாசன சேவைகள் மூன்றைக் குறிப்பிடுக.

B. நிஸ்ஸங்கமல்ல மன்னன் எதிர்நோக்கிய சவால்கள் இரண்டை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

05) I. A. மகா பராக்கிரமபாகு மன்னனின் தாய் தந்தையர் பெயர்களை குறிப்பிடுக.

B. மகா பராக்கிரமபாகு மன்னன் அரச பணிகளை ஆரம்பித்தது எந்த நகரத்திலாகும்?

(03 புள்ளிகள்)

II. மகா பராக்கிரமபாகு மன்னன் தெதுறு ஓயாவுக்கு அருகில் அணைகளை அமைத்த மூன்று இடங்களை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

III. மகா பராக்கிரமபாகு மன்னனின் சமயப் பணிகளை உதாரணங்களுடன் விளக்கிக் காட்டுக.

(05 புள்ளிகள்)

06) I. தொட்டுணரக்கூடிய மரபுரிமைகள் என்றால் என்ன ? அதற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

(03 புள்ளிகள்)

II. யுனெஸ்கோ அமைப்பு உலக மரபுரிமைகளை தெரிவு செய்யும் போது கவனிக்கும் விடயங்கள் இரண்டை தருக. (04 புள்ளிகள்)

III. A. இலங்கையில் காணப்படும் உலக மரபுரிமைகள் இரண்டை கூறுக.

B. இலங்கையின் புராதன கால நடனங்கள், பாடல்கள் போன்ற கலையம்சங்களைப் பற்றிய விடயங்கள் அடங்கிய நூல்கள் இரண்டை பெயரிடுக. (04 புள்ளிகள்)

07) I. பின்வரும் பாதுகாப்பான இடங்களில் கோட்டைகளை அமைத்த பிரதேச ஆட்சியாளர்களை குறிப்பிடுக.

A. மினிப்பே கந்தெனிய

B. கோவிந்தமலை

C. யாப்பகுவ

(03 புள்ளிகள்)

II. அடிக்கடி இராசதானிகள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் இரண்டை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

III. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் சேவைகள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)